நீண்ட காலமாக நிலுவையில் இருந்துவருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் இராஜபாளையம் மெயின் சாலையிலும், அந்த இரண்டு மெயின் சாலையிலும் நடைபெறுகின்ற விபத்துகளைத் தடுப்பதற்கும், அந்தப் பகுதியினுடைய நெரிசலைப் போக்குவதற்கும் இது ஒரு பிரதானமான திட்டம். அதை விரைந்து செயல்படுத்த இயலுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதி மாவட்ட இதர சாலையான ஸ்ரீவில்லிபுத்தூர்–மம்சாபுரம் சாலை 0/0 முதல் 0/2 கி.மீ. வரையில் கடைசிப் பகுதியில் உள்ளது. மம்சாபுரம் பேரூராட்சிப் பகுதியில் வாகனப் போக்குவரத்து குறைவாக உள்ளதால், அப்பகுதியில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்கள் இருக்கையில் இல்லையென்பதால், உங்களுக்கு ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது துணைக் கேள்வி கேட்க உங்களுக்கு அனுமதியில்லை.*

அடுத்து, வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

கொள்முதல் விலை

***6971—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 மார்ச் 28]

(அ) பால் கொள்முதல் விலையைத் தனியாருக்கு இணையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்கள் நலனையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களுக்குப் பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் நலனையும் கருத்தில்கொண்டு, அரசாணை (நிலை) எண் 139, நாள் 17–11–2011–ன்படி பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிக் காற்றில் சிக்கிய அகல் விளக்காகவும், காலங்காலமாகக் கவலையின் பிடியினால் கண்ணீர் சிந்தி பரிதவித்த பால் உற்பத்தியாளர்களின் வயிற்றுக்குப் பால் சோறாகவும், தாகத்தில் தவித்த தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தாய் மடியாகவும் இருந்து, விலை உயர்வுக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து, புதிய விலையை நிர்ணயித்து ஆணை பிறப்பித்த ஏழைகளின் கனவுகளை நனவாக்க வந்த கருணையின் கருவூலமே, சர்வதேசத்தின் சமாதான குரலே, தன்னை உருக்கி பெருந்தவம் புரியும் பூபாலப் புனிதையே, வெற்றித் திருமகளே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழகப் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*